# திருமூலர் கூறும் வாழ்வியல் நெறிகள்

**முனைவர் ம.கீதா (SS)**

**உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை**

**அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்-641043.**

**E-MAIL: mgeethaphd@gmail.com**

12

**ஆய்வுச் சுருக்கம்**

**“கடவுளைக் காண முயல்பவர்கள் பக்தர்கள்**
**கடவுளைக் கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள் "**

சித்தர்கள் என்றால் சித்தத்தை உணர்ந்தவர்கள் என்று பொருள்படும். சித் என்றால் எல்லாவற்றையும் உணர்ந்து கொள்ளும் தன்மையாகும். இறைநிலை, பஞ்சபூதங்கள், செயற்கைக்கோள்கள், தாவரங்கள், உயிரினங்கள், மனித உற்பத்தி, மனித மனம் போன்ற அனைத்தைப் பற்றியும் ஆராய்ந்து தெளிந்தவர்கள் சித்தர்கள்.

மக்கள் சமுதாயம் நலன் பெற வேண்டுமென்ற நோக்கத்தில்தான் ஆதி காலம் முதல் இக்காலம் வரை இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன.அந்த வகையில் தமிழ் மொழியில் தோன்றிய திருமந்திரம் சித்தர் நெறி நிற்கும் மந்திர, தந்திர வழிபாட்டு நூலாகத் திகழ்கிறது. திருமூலர் கூறும் வாழ்வியல் நெறிகள் என்னும் தலைப்பிலான ஆய்வுக் கட்டுரையில் முன்னுரை, திருமூலரும் திருமந்திரமும்,அட்டமா சித்திகள், அன்புடையமை ,பசிப்பிணி தீர்த்தல் ,தானத்தின் சிறப்பு, அறம் செய்யார் செல்வம் ,தீதும் நன்றும் பிறர் தர வாரா, பிறன்மனை நயவாமை, மக்கள் தொண்டே மகேசன் தொண்டு ஆகிய துணைத் தலைப்புகளில் ஆராயப்பட்டுள்ளது. கட்டுரையின் நிறைவாக தொகுப்புரை வழங்கப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள் :** சித்து - புத்தி - மனம் - அட்டமா சித்திகள் - தியானம் - ஞானம் - யோகம் - மந்திரம் - தந்திரம்.

**முன்னுரை**

உலக உயிர்களிலேயே தன்னையும் மேம்படுத்திக் கொண்டு, தன் சமூகத்தையும் மேம்படுத்தும் ஒரே இனம் மனித இனமாகும் . "அரிதரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்றார் அவ்வை மூதாட்டி. அவ்வாறு பெறுவதற்குகரிய மானிடப் பிறவியைப் பெற்ற மக்கள் மண்ணில் அன்பு , வாய்மை, பொறுமை ,கடமை ,ஒழுக்கம், இறைமை போன்ற அறப் பண்புகளுடன் வாழும்போது

சமுதாயம் உயரும். சமுதாயம் உயர்ந்தால் நாடும் உயர்வடையும். சித்தர்கள் யோகத்தின் மூலமும் தியானத்தின் மூலமும் பெரும் பேறு பெற்ற சிறந்த இலக்கியங்களை படைத்தனர். அந்த வகையில் திருமூலர் இயற்றிய திருமந்திரம் ஒரு ஞான நூல்; யோக நூல்; சாத்திர நூல் ;வழிபாட்டு பெட்டகம் என்றெல்லாம் போற்றப்படுகிறது. இறைவன் அருளாலே பாச ஞானம் நீங்கப் பெற்ற நிலையில் பதி ஞானம் பெற்ற மூலன் உரைத்த அருள் அனுபவமாலையாகும். இது மனித உயிர்களை நல்வழியில் நெறிப்படுத்துச் செல்லும் வாழ்வியல் நெறிகளைக்கூறி சமுதாயத்தை மேம்படச் செய்யும் கருவூலமாகும். அதனைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைந்துள்ளது.

**திருமூலரும் திருமந்திரமும்**

சைவத் திருமுறைகளில் பத்தாம் திருமுறையாக விளங்குவது திருமூலரின் திருமந்திரம் ஆகும். 9 தந்திரங்களையும் 232 அதிகாரங்களையும் 3000 பாடல்களையும் கொண்டுள்ளது. ஒன்று முதல் நான்கு தந்திரங்கள் சிவஞானத்தைப் பெறுவதற்கான சாதனங்களைக் கூறுகின்றன. ஐந்தாம் தந்திரம் சைவ சித்தாந்த உண்மைகளைக் கூறுகின்றது ஆறு முதல் ஒன்பது தந்திரங்கள் சிவ ஞானத்தால் பிறக்கும் நன்மைகளைக் கூறுகின்றன. சைவ அடியார்களுள் காலத்தால் முற்பட்டவரும் சித்தர்களுக்கெல்லாம் முதலாவதாகத் தோன்றியவரும் திருமூலரே. தென்னாட்டுத் தளங்களுக்கெல்லாம் யாத்திரை சென்ற தருணத்தில் திருவாவடுதுறை அருகில் உள்ள சாத்தனூரில் இடையன் ஒருவன் இறந்து கிடந்தான். அவனைக் கண்டு ஆடு மாடுகள் வருந்தியதைக் கண்டார். சிறுவன் மீது கருணை கொண்டு தம் உடம்பை விட்டு அவன் உடம்பில் புகுந்து ஆடு மாடுகளை மேய்த்தார். அதன்பின் திருவாவடுதுறை அரச மரத்தடியில் தவமிருந்ததாகவும் பின்னர் ஆண்டுக்கு ஒரு முறை விழித்து ஒவ்வொரு மந்திரமாக எழுதி, 3000 ஆண்டு காலம் எழுதி வீடு பேறு பெற்றார் என்பர். இந்நூல் திருமந்திரமாலை, மூவாயிரம் தமிழ் , தமிழ் மூவாயிரம் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. நிலையாமை ,உயிர்க்கொலை, கல்வி ,பலவகை யோக முறைகள், அன்பு, அறம், வழிபாடு முதலான வாழ்வியல் சிந்தனைகளைத் தன்னகத்தே கொண்டு சமுதாயத்தை வழிநடத்தும் வாழ்வியல் பெட்டகமாகத் திகழ்கிறது.

**அட்டமா சித்திகள்**

சித்துக்கள் எட்டு வகைப்படும். இவற்றை அட்டமா சித்திகள் என்பர். அட்டம் என்றால் எட்டு என்பது பொருள்.

1. **அணிமா** - உடலைச் சிறிதாக்கிக் கொள்ளும் திறம்.
2. **மகிமா** - உடலைப்பெரிதாக்கிக் கொள்ளும் திறம்.

**3.கிரிமா** - கிரி என்றால் மலை. மலை போன்று உடலை திடமாக்கிக் கொள்ளும் திறம்.

**4. இலகிமா** - இலகு என்றால் லேசானது, உடலைப் பஞ்சு போல் இலேசாக்கிக் கொள்ளும் திறம்.

**5. பிராப்தி** - எதையும் நினைத்த மாத்திரத்தில் அடையும் திறம்.

**6. பரகாமியம் -** பர என்றால் பிற . பிறர் உடலில் புகுந்து வெளியேறும் திறம்.

**7.ஈசத்துவம்** - ஒன்றனை அல்லது ஒரு செயலை உருவாக்கி (படைத்தல்) பாதுகாத்து (காத்தல்) நிறைவு செய்யும் (அழித்தல்) திறம்.

**8. வசித்துவம் -** உலக உயிர்களைத் தன்வயப்படுத்தி தன் ஆளுகைப் படி நடக்கச் செய்யும் திறம்.

அட்டமா சித்துக்களிலும் வல்ல சித்தர்களுக்கு சாதி, மத பேதமில்லை. ஆண் பெண் மேல் கீழ் என்னும் வேறுபாடுகள் இல்லை.

**அன்புடைமை**

அன்பு என்பது ஒருவருக்கொருவர் பழகிக் கொண்டுநட்புக் கொள்ளும் உறவாகும். அன்பு கொள்ளும் உறவுகளைப் பொறுத்து அல்லது உயிர்களைப் பொறுத்து அன்பு என்ற சொல்லின் பொருள் மாறுபடும். பெற்றோர்களின் மீதும், உறவினர்களின் மீதும் வைக்கும் அன்பு பாசம் எனப்படும். குருவின் மீது வைக்கும் அன்பு மரியாதை எனப்படும். இறைவன் மீது வைக்கும் அன்பு பக்தி என்றும், இழிந்த உயிர்கள் மீதுகாட்டும் அன்பு கருணை என்றும் பாகுபடுத்தப்படலாம். திருமூலர் இறைவனையும் அன்பையும் ஒன்றாக நினைக்கின்றார். உயிரின் இரக்கமானது அன்போடுதான் நிலைபெறுகின்றது. மேலும் உலக உயிர்களிடத்து அன்பு செலுத்துவோரே பேரின்ப இறைநிலையை அடையமுடியும் என்றும் சீவனுள் இருக்கும் இறைவனை அறிவதற்கு அன்புவேண்டும் என்றும் கூறுகிறார். இதனை,

**‘’அன்பு சிவம் இரண்டென்பார் அறிவிலார்**
**அன்பே சிவ மாவது யாரும் அறிகிலார்**
**அன்பே சிவ மாவதுயாரும் அறிந்தபின்**
**அன்பே சிவ மாய் அமர்ந்திருந்தாரே”** **(திரு.பா -270)**

என்ற பாடலில் அன்பெனும் வித்து சிவமாய் விளைந்து இன்பமாகக் கனிந்து பயன் தரும்

என்கிறார். இதில் அன்பே கடவுள் அன்பே சிவம் இரண்டும் வேறு வேறு அல்ல என்ற திருமூலரின் வாக்கு புலனாகின்றது. இதனையே திருவள்ளுவர் இவ்வுலகத்தில் இன்பம் அடைந்தவர் அடையும் சிறப்பு, அவர் அன்புடையவராகப் பொருந்தி வாழ்ந்த வாழ்க்கையின் பயன் என்று கூறுவதை,

**"அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து**
**இன்புற்றார் எய்துஞ் சிறப்பு"** **(குறள் 75)**

என்ற குறள் வழி அறிய முடிகின்றது .பெரும்பாலான சித்தர்களின் வழிபாடு அன்பு வழியே ஆகும். திருமூலர் இறைவன் மீதுகொண்டுள்ள அன்பையும் அவ்வன்பினால் விளையும் பயன்களையும் கூறியுள்ளதை,

**“உள்ளம் பெருங்கோயில் ஊன்உடம்புஆலயம்**
**வள்ளல் பிராணார்க்குவாய் கோபுரவாசல்**
**தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவமாகும்**
**கள்ளப் புலன் ஐந்தும் காளாமாணிவிளக்கே"**

**(திரு. பா.1823)**

என்ற பாடலின் மூலம் உள்ளத்தைக் கோவிலாக்கி, சீவனைச் சிவனாக்குவதற்கும் உள்ளன்பேகாரணம் என்று குறிப்பிடுவதன் மூலம் அறியலாம்.

**பசிப்பிணிதீர்த்தல்**

வாழ்வில் அனைத்து உயிர்களிடமும் அன்பு காட்டுவதோடு அறம்செய்து வாழ்வதும் சிறந்தது. சமுதாயத்தில் அனைவரும் பின்பற்றக்கூடிய அறங்களுள் முதன்மையானது பசிப்பிணி தீர்த்தலாகும். மிகுதியாக பாவகாரியங்கள் செய்தவர்கள் அப்பாவத்திற்குரிய பரிகாரமாகப் பசுவிற்குஒருபிடிப் புல் அளித்தால் பாவம் தேயுமென்றுஅறநூல்கள் கூறுகின்றன. நம்மால் முடிந்தஅளவுஅறம் செய்யவேண்டும். வீரசைவர்கள் இறையடியார்களுக்கு உணவளிக்காமல் நாட்கள் பலவாகினும் உண்ணமாட்டார்கள். உண்பதற்குமுன், இறைவனுக்குப் பச்சிலை கொண்டுவழிபடுதல், பசுவிற்குசிறிதளவாவதுபுல் கொடுத்தல்,உண்ணும் போதுகைப்பிடியளவாவது உணவளித்தல், தெளிவற்ற சிந்தனை யுள்ளவர்களுக்கு நல்லகருத்துரைவழங்குதல் போன்றன எல்லோரும் ஆற்றக்கூடியஎளிமையான அறங்களாகும். இதனை,

**“யாவர்க்குமாம் இறைவற்கொருபச்சிலை**
**யாவருக்குமாம் பசுவுக்கொருபச்சிலை**
**யாவர்க்குமாம் உண்ணும்போதொருகைப்பிடி**
**யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே”**

**(திரு.பா.252)**

என்ற பாடலின் மூலம் குறிப்பிடுகின்றார். மேலும் அறம் செய்பவர்கள் முக்திக்கு எனத் தவம் செய்யத் தேவையில்லை. ஏனெனில் அவர்கள் செய்யும் அறமே அதற்கு வழியாகும் என்றகருத்தும் அறியத் தக்கது.

**தானத்தின் சிறப்பு**

அறம் செய்பவர்கள் மனம்,மொழி,செயல் இவற்றால் அறம் புரியவேண்டும் செல்விருந்தோம்பி வருவிருந்துக்காகக் காத்திருக்கும் தமிழர் பண்பாட்டிற்குரிய உயரிய அறக்கருத்தைத் திருமந்திரம் கூறுகிறது. தமக்கு வேண்டியவர் வேண்டாதவர் என்ற பாகுபாடோ, உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாட்டுணர்வோ இன்றி மற்றவர்களுக்குக் கொடுக்கவேண்டும். மற்றவர்களுக்குக் கொடுக்கும் பொருள் பழையன அல்லது புதியனவாக இருக்கவேண்டும். இதனை,

**“ஆர்க்கும் இடுமனி அவரவர் என்னன்மின்**
**பார்த்திருந்து உண்மின் பழம்பொருள் போற்றமின்**
**வேட்கையுடையீர் விரைந் தொல்லை உண்ணன்மின்**
**காக்கை கரைந்துண்ணுங் காலம் அறிமினே”**

**(திரு. பா-107)**

என்ற பாடலின் மூலம் எல்லோருக்கும் கொடுங்கள் என்றும் கூடியேஉண்ணவேண்டும் என்பதை விளக்ககாக்கை இனத்தைச் சுட்டிக் காட்டுவதையும் அறியமுடிகின்றது. இதனையே வள்ளுவர்,

**"வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை**
**பருவந்து பாழ்படுதல் இன்று"** **(குறள் 83)**

என்ற குறள் வழி பாடியுள்ளதையே திருமூலரும் பார்த்து இருந்து உண்மின் என்று கூறுவதோடு ஒப்பு நோக்கத்தக்கது.

**அறம் செய்யார்செல்வம்**

ஒருவன் தான் அனுபவிக்கும் இன்பத்திற்கும், துன்பத்திற்கும் அவன் செய்யும் செயல்களே

காரணமாக அமைகின்றன. இளமை, செல்வம், யாக்கை இவையெல்லாம் நிலையற்றவை என்று உணர்ந்தாவது அறம் செய்யவேண்டும். பலர்,அறம் இதுவென்று அறியாமலும், அறத்தின் பயனாக விளங்கும் இறைவனையும் அறியாமலும் வாழ்கின்றனர். இவ்வாறு வாழ்பவர்கள் பிறப்பு, இறப்பால் ஏற்படும் துன்பத்தால் மேன்மேலும் உழன்று நரகத்தில் வீழ்வார்கள் என்பதை,

**"எட்டி பழுத்த இருங்கனி வீழ்ந்தன**
**ஒட்டியநல் அறம் செய்யதவர் செல்வம்**
**வட்டிகொண் டீட்டியே மண்ணின் முகந்திடும்**
**பட்டிப் பதகர் பயன் அறியாரே"**

**(திரு. பா-258)**

என்ற பாடலின் மூலம், எட்டிப்பழம் பழுத்து யாருக்கும் பயன்படாது வீணாகப் போவது போல, அறஞ்செயார் செல்வமும் யாருக்கும் பயன்படாது வீணாகும் எனப் புலப்படுத்துகிறது.

**தீதும் நன்றும் பிறர் தர வாரா**

தமிழர்கள் கண்ட மாபெரும் தத்துவம் இது ஆகும் .நமக்கு ஏற்படும் அத்துணை நன்மை தீமைகளுக்கும் நாம் தான் காரணம். இதனை உணரும் வரையில் மற்றவரை நாம் குறை கூறிக் கொண்டிருப்போம். சுவற்றை நோக்கி வீசப்பட்ட பந்து நம்மை நோக்கி திரும்ப வரும் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டால் சமூகத்தில் பல சிக்கல்கள் தீரும். உலகில் தோன்றிய பல ஞானிகள் இவ்வுண்மையில் ஒன்று படுகின்றனர். அவ்வகையில் திருமூலர்,

**" தனக்குத் தானே பகைவனும் நட்டானும்**
**தனக்குத் தானே மறுமையும் இம்மையும்**
**தானே தான்செய்த வினைப்பயன் துய்ப்பானும்**
**தானே தனக்குத் தலைவனும் ஆமே"** **(திரு. பா - 2228)**

என்று குறிப்பிடுகின்றார். மேலும், இப்பாடலில் வினையைச் சுட்டி ஒரு மனிதனுடைய தன்னம்பிக்கையைக் குறைக்கும் நோக்கோடு எதிர்மறையாக மட்டுமல்லாமல் நேர்மறையாகவும் குறிப்பிட்டு நம்பிக்கையை ஊட்டுகிறார். இதே செய்தியினைத் திருவள்ளுவரும்,

**"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா**
**பிற்பகல் தானே வரும்"** **(குறள்- 316 )**

என்ற குறள் வழி குறிப்பிட்டுள்ளதைக் காண முடிகின்றது.

**பிறன் மனை நயவாமை**

வீட்டில் அன்பொத்த மனைவி இருக்க பிறருக்கு உரிமையான மனையாளை நெருங்குபவன் வாழ்க்கையில் அழிந்து போகிறான். "பிறர் மனை விளைவோன் கிளையோடும் கெடுவான் "என்று இராமாயணம் கூறுகிறது. கயிலை மலையைத் தூக்கிடும் வலிமையும், பக்தியும் கொண்ட இலங்கை மன்னன் இராவணன் சீதையை நயத்தலால் மட்டுமே அழிந்து போனான். பிறர் மனைவியைக் காம எண்ணத்துடன் நோக்க கூடாது என்ற உயரிய கருத்தை திருமூலர் வலியுறுத்துகிறார். தொட்டுத் தாலி கட்டியமனைவி வீட்டில் இருக்க அவளை விடுத்து பிறன் மனையை நாடுவது பலா இருக்க ஈச்சம் பழத்தை நாடு வதற்கு ஒப்பாகும் என்ற உயரிய கருத்தை திருமந்திரம் கூறுகிறது. இதனை,

**"ஆத்தமனையாள் அகத்தில் இருக்கவே**
**காத்தமனையாளைக் காமுறுங் காளையர்**
**காய்ச்சபலாவின் கனியுன்ன மாட்டாமல்**
**ஈச்சம் பழத்துக் கிடருற்றவாறே"** **(திரு. பா-244)**

என்ற பாடலின் மூலம் குறிப்பிடுகின்றார்.

**மக்கள் தொண்டே மகேசன் தொண்டு**

தானம், தருமம் என்ற பெயரில் கோவில்களுக்குச் சிலசெல்வந்தர்கள் பொருளை அள்ளகிக் கொடுக்கின்றனர் நடமாடும் கோவில்களாகிய மனிதர்களுக்குக் கொடுக்க மறுக்கின்றனர். இறைவனுக்குக் கொடுக்கும் பொருள் மனிதர்களைச் சென்றடைவதில்லை. ஆனால் மனிதர்களுக்குக் கொடுக்கும் பொருள் இறைவனைச் சென்றடையும் என்கிறார். இதனை,

**"படமாடக் கோயில் பகவற் கொன்றீயில்**
**நடமாடக் கோயில் நம்பர்க் கங்காகா**
**நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றீயில்**
**படமாடக் கோயில் பகவற்கதாமே** **(திரு. பா-1821)**

என்ற பாடலின் முலம் விளக்குகிறார்.

**தொகுப்புரை**

சமுதாயத்தில் மனிதர்கள் அறநிலையோடும், ஒழுக்க மேம்பாட்டோடும் வாழ்வாங்கு வாழ்ந்து, பேரின்ப நிலையை அடைய வேண்டிய இலக்கினை, நமது சித்தர்களும் அருளாளர்களும் அறிவுறுத்தி உள்ளனர் .அந்த வகையில், திருமூலர் சித்தர்களுக்கெல்லாம் சித்தராக விளங்கிய பெருமைக்குரியவர். **"தாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெற வேண்டும்"** என்று விரும்பியவர். மனிதனானவன் ஒழுக்கத்தில் சிறந்து விளங்கவும், உடலிலும் உள்ளத்திலும் வலிமை பெற்று

நல்வாழ்வு பெறவும் திருமந்திரம் உதவுகிறது. தத்துவங்கள் கூறும் உண்மை பொருள் என்றும் மாறாத தன்மையுடையனவாகும். அவ்வகையில், தத்துவ நூலாகவும், அறங்கூறும் நூலாகவும், மனிதனை நல்வழிப்படுத்தும் நூலாகவும் திருமந்திரம் திகழ்கிறது. அன்போடு செய்யும் வழிப்பாடு சிறந்தது . அகப்புற வழிபாடுகள் பல இருப்பினும் அன்புடன் கூடிய அக வழிபாடே பயன் தரும். அன்பும் சிவமும் ஒன்றுதான் என்றும் அன்போடு அறங்களைச் செய்வதே வாழ்வின் பயன் என்றும் அறங்களில் முதன்மையானது உணவறமே என்றும் தானத்தின் சிறப்பு குறித்தும் ஈயாதார் நிலை குறித்தும் தீதும் நன்றும் பிறர் தர வாராது என்றும் பிறர் மனை நோக்கா தன்மையினையும் மிகச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். இக்கருத்துக்களை மனதில் கொண்டு வாழ்வோமானால் வாழ்க்கை வளமடைவதோடு, உயர்ந்த நிலையையும் அடைய முடியும் என்பது திண்ணம்.

**துணைநூற்பட்டியல்**

1.ப. இராமநாத பிள்ளை , திருமந்திரம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ
சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் ,சென்னை -18, மறு பதிப்பு - 2003.

2.மு .வரதராசனார், திருக்குறள் ,சாரதா பதிப்பகம், சென்னை ,2021.

3. ஜகதா, சித்தர்களின் வாழ்வும் வாக்கும், ராமையா பதிப்பகம், சென்னை, 2013